அல்லது வேறொரு இடத்திலிருந்து தங்கள் இடத்திற்கு வருவதாக இருந்தாலோ, இப்போது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வந்தது போல, இதற்கு முன்னர் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் வந்தது போல வரவேண்டும். யாராவது உறுப்பினர் அப்போது உரையாற்றிக் கொண்டு இருந்தால், அவருக்கு இடையூறு ஏற்படாத அளவுக்கு வேறொரு இடத்தில் உட்கார்ந்து விட்டு, பேசுகின்ற உறுப்பினர் பேசி முடித்ததற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர்கள் வந்தார்களே, அதே முறையை எல்லோரும் பின்பற்றி தங்கள் இருக்கைகளுக்குச் செல்ல வேண்டும்.

வினா எண் 5, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5—

தேயிலைத் தூளில் கலப்படம் செய்வதைத் தடுக்க நடவடிக்கை

*20520–**டாக்டர் எம். கருப்புசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேயிலைத் தூளில் கலப்படம் செய்யப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கலப்பட தேயிலைத் தூள் மற்றும் கலப்பட தேநீர் தயாரிப்பாளர்கள் மீது உணவுப் பொருள்கள் கலப்பட சட்டத்தின் கீழ் உணவு ஆய்வாளர்கள் நடவடிக்கை எடுத்து வழக்கு தொடர்ந்து உள்ளார்கள்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 250 தேயிலைத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. உலகச்சந்தையில் மிகத் தரமான தேயிலை ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு இயங்கிக் கொண்டு

இருக்கின்றார்கள். சிலர், கறுப்பு நிறத்தில் உள்ள மண், காட்டுச்செடி தழைகள் மற்றும் கயிறு திரித்த பின்பு வீணாகின்ற நார்களைக் கலந்து தேயிலையினுடைய தரத்தை குறைத்து விடுகின்றார்கள். ஆகவே, அப்படிப்பட்ட போலித் தொழிற்சாலைகளைக் கண்டுபிடித்து அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் மாதிரிகள் எடுக்கப்பட்டு அவை பரிசோதிக்கப்படுகின்றன. அதிலே குறைபாடுகள் இருந்தால் அவர்கள்மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல, கடந்த ஆண்டுகளில் ஏறத்தாழ 2,790 மாதிரிகளும் அதற்குப் பின்னாலே 2,832 மாதிரிகளும் எடுக்கப்பட்டு அதிலே 34 பேர் தவறு செய்திருந்தார்கள் என்று சொல்லி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, இது தொடர்ந்து செய்யப்படும்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தொழிற்சாலைகளுக்குள் அவர்களே கலப்படம் செய்கின்றார்கள். ஆனால் தேயிலைத் தொழிற்சாலைகளினுடைய முதலாளிகள் அரசாங்கத்திடமிருந்து தடையாணை வாங்கி இருக்கின்றார்கள். தொழிற்சாலைக்குள் சென்று, கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு, அரசோ மற்ற அதிகாரிகளோ உள்ளே வரக்கூடாது என்று ஒரு தடை உத்தரவு இருக்கிறது. அதை நீக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்? அதை நீக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைக்குள்ளே கலப்படம் நடந்தால், அது பெரிய குற்றம். அது மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. அந்தத் தொழிற்சாலைக்குள்ளே வந்து கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு தடை உத்தரவு வாங்கப்பட்டு இருக்கிறது என்று தெரிவித்தார்கள். அரசாங்கத்திடமிருந்து வாங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நிச்சயமாக அப்படி இருக்க முடியாது என்று நான் நம்புகிறேன். காரணம், அரசாங்க அதிகாரிகளே போய் அங்கே பரிசோதனை செய்வதற்கு, அரசாங்கமே தடை விதித்திருக்கும் என்று சொல்ல முடியாது. வேறு ஏதாவது நீதி மன்றத்தினுடைய ஆணை இருக்கிறதா என்று எனக்கு சரியாகத் தெரியவில்லை. ஆனால், அப்படி இருந்தால்

1994 நவம்பர் 4]

கலப்படம் செய்யப்படுவது என்பது அது பேக்டரிக்குள்ளே இருந்தாலும் சரி, வெளியிலே இருந்தாலும் சரி, அதற்குப் பின்னாலே அது விற்கப்பட்டு, தேநீர் அருந்துகின்ற இடத்திற்கு வந்து அந்தத் தேநீரிலே கலப்படம் இருக்கிறது என்று தெரிந்தால்கூட, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, நிச்சயமாக பேக்டரிக்குள்ளே இது நடந்தால் உடனடியாக சரியான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தூளில் கலப்படம் செய்பவர்கள் அதை 'கேட்டில் ஃபீட்' என்று பதிவு செய்து கொண்டு முந்திரிக் கொட்டை உமி மற்றும் சோடா உப்பு ஆகியவற்றைக் கலந்து தயார் செய்து கொண்டிருக்கின்றார்கள். கலப்படம் செய்து விற்கப்படும் டீ தூள், சாதாரண டீ தூளைவிட நன்றாக இருக்கிறது என்று அதை வாங்கி விற்கும் கடைக்காரர்களே சொல்கின்றார்கள். இதை ஏன் சொல்கின்றேன் என்றால், நான் வழக்கறிஞராக இருக்கும்போது இதைப்போன்ற பல வழக்குகளை சந்தித்து இருக்கின்றேன். இந்தந்தத் தவறுகள் இந்தந்த இடங்களில் நடக்கின்றன என்பதை என்னால் சொல்ல முடியும். நல்ல டீ கம்பெனிகள்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, தரமான டீ கம்பெனிகள்கூட நன்றாக சாயம் வருவதற்காக இந்தக் கலப்படத்தைச் செய்கின்றார்கள். கலப்படத்தைப் பற்றிய மெடிக்கல் ரிப்போர்ட் வரும்போது, "It is not dangerous to health; it is not hazardous to health" என்று அவர்கள் சர்டிபிகேட் கொடுத்தால் சட்டத்தின் மூலமாக இவர்கள் தப்பித்துக்கொள்கின்றார்கள். இவர்களை ஃபுட் செல் இன்ஸ்பெக்டர்கள் அரஸ்ட் பண்ணச் செல்லும்போது, நாங்கள் 'கேட்டில் ஃபீட்' லைசன்ஸ் வைத்திருக்கின்றோம்; நாங்கள் இதை விலங்குகளுக்குத்தான் உணவாக அளிக்கின்றோம் என்று சொல்லி தப்பித்துக் கொள்கின்றார்கள். இவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு, சட்ட விதிகளை மறுபரிசீலனை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-15*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தப்பிப்பதற்கு என்னென்ன வழிமுறைகள் இருக்கின்றன என்பதை அறிந்த வழக்கறிஞர் போல் இருக்கிறது. (சிரிப்பு)

[1994 நவம்பர் 4

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே எப்படியெல்லாம் தப்பித்துக் கொள்வதற்கு வழிகள் இருக்கின்றன என்பதை முழுமையாகச் சொல்லியிருக்கிறார்கள். அநேகமாக அவர்களுக்கு, வெளியிலே இருக்கின்ற அந்த ஃபேக்டரி ஓனர்களுக்கு, தெரியாத சிலவற்றைக்கூட அவர்கள் சொல்லி விட்டார்களோ என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. காரணம், அவர் அதுபோல் நிறைய வழக்குகளை நடத்தியிருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியும்; அதிலே தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் என்னென்ன இருக்கின்றன என்பதை நிச்சயமாக இந்த அரசு ஆய்வு செய்யும். இப்பொழுது உடனடியாக அந்தப் பகுதியிலே இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது தெரிவிக்கப்பட்டு, உடனடி நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதையும், அதேபோல, இந்தச் சட்டச் சிக்கல்களிலே தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்புகள் இருக்குமேயானால் அதை மாற்றியமைப்பதற்கு வேறு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப்பற்றி சட்டத்துறையோடு கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலைத்தூள் கலப்படம் என்பது நீலகிரி மாவட்டத்தில், மாண்புமிகு டாக்டர் கருப்புசாமி அவர்கள் சொன்னதைப்போல, பல தேயிலைத் தொழிற்சாலைகள் இருந்தாலும், இந்தியா முழுவதில் இருந்துமே 2-வது தரம், 3-வது தரம் என்று குப்பை கூளங்களை நீலகிரிக்குக் கொண்டு வந்து கலப்படம் செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆக, நீலகிரி மாவட்டத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் மட்டும் இல்லாமல், மேட்டுப்பாளையத்திலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் உள்ள அநேக தேயிலைத் தொழிற்சாலைகள்-ஆனால் அவை உண்மையில் தேயிலைத் தொழிற்சாலைகள் அல்ல ; நீலகிரியிலிருந்து தேயிலை ஏற்றிய வண்டிகள் வந்தவுடன், அந்த வண்டிகளை வழிகளில் நிறுத்தி அந்தத் தேயிலையை எடுத்துவிட்டு பிறகு கலப்படம் செய்து எடுத்துக்கொண்டு போகிறார்கள். இதனால் அநேக பலதரப்பட்ட வியாதிகள் வருகின்றன; இதனால் குழந்தைகளுக்கு பாதிப்பு மிகவும் அதிகம் ஆகின்றது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதுபோல, ஆண்டுக்கு ஒரு முறை சேம்பிள் எடுக்காமல், 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது ஒவ்வொரு

1994 நவம்பர் 4]

தொழிற்சாலைக்கும் ஆய்வாளர்கள் கண்டிப்பாகச் சென்று, அந்த சேம்பிள்களை எடுப்பதன்மூலம் கண்டிப்பாக இந்தக் குற்றங்களைக் குறைக்கச் செய்ய முடியும். மேலும், தற்போதுள்ள தண்டனை, அபராதத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதன் மூலமாக இந்தக் கலப்படத்தை நிறுத்தலாம் என்று சொல்லிக்கொண்டு, மாண்புமிகு அமைச்சரவர்கள் இதுகுறித்து உடனடியாகத் தங்களுடைய துறையினுடைய அதிகாரிகளுக்குச் சொல்லி அந்தக் கலப்படத்தை நிறுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கைகளை உடனடியாகச் செயல்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஆண்டுக்கு ஒரு முறை எடுத்தது என்று சொல்லவில்லை. ஒரு ஆண்டு முழுவதும் எடுத்த கணக்கைச் சொன்னேன். ஆண்டு முழுவதும் எடுத்துக்கொண்டிருப்பது இரண்டாயிரத்துச் சில்லறை என்று நான் சொன்னேன். எனவே, அதுபோல தொடர்ந்து எடுக்கப்படுகிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற பல்வேறு கருத்துக்களின் அடிப்படையில் இதை இன்னும் எவ்வளவு தீவிரமாகக் கண்காணிக்க முடியும், இதை இன்னும் எவ்வளவு சிறப்பாகக் கட்டுப்படுத்த முடியும் என்பதைப் பற்றி நிச்சயமாக அரசு மிக்க கவனத்தோடு செயல்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு வழங்கல் துறையோடு நல்வாழ்வுத் துறையும் சேர்ந்து, அதிலே என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ அதை எடுக்கும். நான் ஏற்கனவே சொன்னபடி, சட்டத்திலே ஏதாவது குறைபாடுகள் இருந்து, அதிலே தப்பிக்கிற வழி இருந்தால் சட்டத்துறை அமைச்சரோடு பேசி, அதற்கான நடவடிக்கையை நிச்சயமாக இந்த அரசு எடுக்கும். இதுபோல உணவுப் பொருள்களிலே கலப்படம் செய்யக் கூடியவர்கள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலே இந்த அரசாங்கம் மிகக் கவனமாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தேயிலைத் தொழிற்சாலைகளிலே--தேயிலை பேக்டரிக்குப் பின்னாலே இருக்கக்கூடிய ஒரு பகுதியில் தேயிலை வேஸ்ட், டீ வேஸ்ட் என்பதைக் கொட்டுகிறார்கள். அதை அங்கிருந்து குன்னூருக்கு எடுத்துச் சென்று, தேயிலைத் தோட்டத் தொழிற்சாலைகளில் பல்வேறு இடங்களில்

அங்கே கலப்படம் செய்வதாக ஒரு நிலைமை இருக்கின்ற காரணத்தால், இந்த டீ வேஸ்டை எங்கிருந்து, எந்த இடத்திற்கு எடுத்துச் செல்கிறார்களோ அப்படி எடுத்துச் செல்கிறபோது ஒரு டிஸ்போசபிள் ஸ்லிப்பைக் கொடுத்து, அதை நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கும் கொண்டு வந்தால் இதைத் தடுக்கலாம் என்று நான் நினைக்கிறேன். இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்வு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த டீ வேஸ்ட் மட்டும் கலப்படம் செய்யப்படுவதாக உறுப்பினர்கள் சொன்னார்கள். இன்னும் பல்வேறு பொருட்களைக் கலப்படம் செய்வதாகவும் சிலர் சொல்கிறார்கள். எனவே, அத்தனையையும் பட்டியல் போட்டு, இவைகள் கலப்படம் செய்யப்படுகின்றன, இதைக் கவனிக்க வேண்டும், இதைச் சரியாகப் பார்க்க வேண்டுமென்று சொல்லி, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு நாம் தெரிவிக்கலாம். எனவே, இதிலே என்னென்ன கலப்படம் செய்யப்படுகிறது--இது ஒன்று மட்டுமல்ல; இப்பொழுது நாம் டீயைப் பற்றி மட்டும் பேசிக் கொண்டிருக்கிறோம்; பல்வேறு காரியங்களுக்காகப் பல்வேறு பொருட்களைக் கலப்படம் செய்வதற்கான முயற்சிகள் ஒவ்வொரு மட்டத்திலும் எடுக்கப்படுகின்றன. அதை அரசாங்கம் தடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. எனவே--இதில் எந்த அளவிற்கு அதைக் கட்டுப்படுத்த முடியுமோ அதற்கு நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, டாக்டர் வெ. புருஷோத்தமன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

6—

சென்னை-ஒகேனக்கல்லுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்.

***34283-டாக்டர் வெ. புருஷோத்தமன் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னையிலிருந்து ஒகேனக்கல்லுக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?